**சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டம் - 2022**

---

சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் 2017 நவம்பர் 30 இல் இடம்பெற்ற கலந்துரையாடல் குறிப்புக்களின் II ஆம் பின்னிணைப்பின் 12 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. மூன்றாம் நிலை வைத்தியசாலைகளில் உள்ள மருத்துவ வசதிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் தொற்றாத நோய்கள், குறிப்பாக இருதய நோய்களைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்கான மருத்துவ சேவையை மேம்படுத்தி அதன் மூலம் செயற்திட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கை மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,559 மில்லியனுக்கு சமமான ஜப்பான் யென் 11,352 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,519 மில்லியனுக்கு சமமான ஜப்பான் யென் 10,639 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,040 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஒக்தோபர் 20 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 ஒக்தோபர் 20 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 5 இன் 43 (அ) பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான நாணயமாற்று சமநிலை சீராக்கங்களுக்கு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 204 | திறைசேரியின் அட்டவணை 33 இன் பிரகாரம் புள்ளிவிபரங்கள் தொடர்புடைய நாளில் யென் பெறுமதியுடன் தொடர்புடையதாக பேணப்படுகிறது. இந்த கணிப்பீடுகளை செய்யும் போது, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் வெளியீடு வெளியிடப்பட்டிருக்கவில்லை. திறைசேரி ஏற்பாடுகளின் பிரகாரமான விலைவிகிதங்களில் கொடுப்பனவுகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) | சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் மேம்பாட்டு செயற்திட்டத்தால் ஆலோசனை சேவை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அலுவலக உபகரணங்கள், நடைமுறையல்லாச் சொத்துகளின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படவில்லை. | 3 | ஆலோசனை நிறுவனத்துக்காக தனியான சொத்துப் பதிவேடு பேணப்படுகிறது. எதிர்காலத்தில், ஆலோசனை நிறுவனத்தின் அலுவலக உபகரணங்கள் வணிகத் திட்டத்தின் சொத்து பதிவேட்டில் சேர்க்கப்படும். | செயற்திட்டத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செலவினக் கூற்றுடன் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட | 33 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் வெளிப்படுத்தல்கள் தொடர்புடைய செயற்திட்டத்தின் கொடுப்பனவு திகதி மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் கணக்கீட்டு | தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சரியான கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கின் பெறுமதிகளை ஒப்பிடும் போது வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திகதியின் பின்னர் ஒரு நாளில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அந்த கூற்றுக்களின் யென் விகித பெறுமதி கூற்று வழங்கப்பட்ட நாளின் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்படுகிறதுடன் செலவின திகதியின் அடிப்படையில் அல்ல. திறைசேரியின் பிரகாரம் செயற்திட்டத்தின் கணக்கு சரியானதாகும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாண இல. 507 மற்றும் 756 | இருப்பு மெய்மையாய்வுச் சபைகள் நியமிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றின் அறிக்கைகள் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இருப்பு மெய்மையாய்வு சபைகளை மேற்கொள்வது தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில், தயாரிப்பு மெய்மையாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும் |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை, 2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை | செயற்திட்டத்தினால் ரூபா 5 மில்லியனிற்கு கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் சுகாதார உபகரணங்களுக்கு நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தால் பேணப்படும் நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

(அ)

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | | |
| இல்லை | கட்டிட நிர்மாணம் | 100 | 30&60 | இந்த செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 06 பெரிய அளவிலான செயற்திட்டங்களின் (மெகா செயற்திட்டங்கள்) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 05 செயற்திட்டங்களின் முன்னேற்றம் 30 சதவீதமாக இருந்ததுடன் ஒரு செயற்திட்டத்தின் முன்னேற்றம் 60 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னேற்றம் குறைந்த அளவிலேயே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2022 முதல் பாதியில் கேள்வியை வழங்க முடியவில்லை. |

**முகாமைத்துவத்தின் பதில்** கடன் பெறுவதில் முன்னேற்றம் குறைவதற்கான முக்கிய காரணங்கள். எவ்வாறாயினும், கடனை இடைநிறுத்தாமல் 2022 முதல் பாதியில் டெண்டரை வழங்க முடிந்தால், வரும் ஆண்டுகளில் முன்னேற்றம் மிக அதிகமாக இருக்கும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** விரும்பிய முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் இலக்கு அடைந்துகொள்ளப்பட வேண்டும்.

| (ஆ) | செயற்பாடு | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | மருத்துவ உபகரணங்களை வழங்கி நிறுவுதலுடன் கூடிய கட்டிடங்களின் நிர்மாணம். | 03 செயற்திட்டங்கள் 08, 10 மற்றும் 12 மாடிகளுடன் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டதுடன் ஏனைய 03 கட்டிடங்கள் மருத்துவ உபகரணங்களை வழங்கி நிறுவுதலுடன் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், இந்த செயற்திட்டங்களின் தற்போதைய நிலை, கட்டிடத் திட்டங்கள் மற்றும் கேள்வி ஆவணங்கள் JICA இன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன்னேற்ற அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பௌதீக செயலாற்றல் தொடர்பாக திருப்தியடைய முடியாதுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பெறுகைக் கட்டத்தை இறுதி செய்ய முடியவில்லை. | விரும்பிய முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் இலக்கு அடைந்து கொள்ளப்பட வேண்டும். |